# மூன்றாம் திருப்புதல் தேர்வு – 2025

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்:100

பகுதி - I (மதிப்பெண்கள் – 15)

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.
கொடுக்கப்பட்ட மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15x1=15

1. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை ______
   அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
2. பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும் இப்புதிருக்கான சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
   அ) நவீனம் ஆ) புரட்சி இ) போராட்டம் ஈ) புதுமை
3. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ______
   அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
   இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்
4. பெயரெச்சத் தொடரைத் தேர்க
   அ) இனியன் கவிஞர் ஆ) குயில் கூவியது இ) அன்பால் கட்டினார் ஈ) கேட்ட பாடல்
5. பரிபாடல் அடியில் "விசும்பும் இசையும்" என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?
   அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் போராலியையும்
6. கூத்தராற்றுப்படை என்று அழைக்கப்படும் நூல் ______
   அ) மலைபடுகடாம் ஆ) முல்லைப்பாட்டு இ) பரிபாடல் ஈ) புறநானூறு
7. ஏறுகோட்பறை ______ என்னும் நிலத்துக்குரிய பறை ஆகும்.
   அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) முல்லை ஈ) நெய்தல்
8. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது ______
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம்
9. பாலகாண்டம் ஆற்றுப்படலத்தில் பாயும் நதியாகச் சுட்டப்படுவது ______
   அ) வேளியாறு ஆ) பாலாறு இ) சரயு நதி ஈ) கோதாவரி
10. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் ______
   அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
   இ) இகழ்ந்தால் இறந்து விடாது என் மனம் ஈ) என் மனம் இறந்து விடாது இகழ்ந்தால்
11. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவோடு காக்க என்று ______
   அ) கருணையின் எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத் தமக்காக
   இ) கருணையின், பூக்களுக்காக ஈ) எலிசபெத் பூமிக்காக

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி:– (12, 13, 14, 15)

உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்
செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே

12. இப்பாடலின் ஆசிரியர் ______
   அ) குலசேகராழ்வார் ஆ) பெருஞ்சித்திரனார் இ) பாரதியார் ஈ) குமரகுருபரர்
13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் ______
   அ) பரிபாடல் ஆ) பெருமாள் திருமொழி இ) கனிச்சாறு ஈ) காசிக்காண்டம்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



14. எதுகையை எழுதுக.
அ) அந்தும்பி – முந்துற்றோம்
ஆ) உள்ள – கனல்மூள
இ) உந்தி – உள்ள
ஈ) அந்தும்பி – அதுபோல

15. தும்பி என்பதன் பொருள்
அ) வண்டு ஆ) தேன் இ) சிறிய ஈ) பெரிய

## பகுதி – II (மதிப்பெண்கள் – 18)

### பிரிவு – 1

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**
**வினா எண் 21 –க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **4x2=8**

16. விடைக்கேற்ற வினா அமைக்க:–
அ) வாழையின் அடி தண்டு எனப்படுகிறது.
ஆ) விளியுடன் வினை தொடர்வது விளித்தொடர் ஆகும்.
17. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
18. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
19. பொன் ஏர் பூட்டுதல் என்றால் என்ன ?
20. ஜெயகாந்தனின் சிறுகதைத் தொகுப்புகள் யாவை ?
21. "தரும்" – என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** **5x2=10**

22. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.
அ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
ஆ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
23. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.
அ) வளி – வாளி ஆ) தொடு – தோடு
24. பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
25. **கலைச்சொற்கள் தருக:–**
அ) Ultraviolet Rays ஆ) Belief
26. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச்சுவை மிகுந்திருக்கும்.
இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.
27. எண்ணுப்பெயர், தமிழ் எண் எழுதுக.
அ) ஐந்து சால்பு ஊன்றிய தூண் ஆ) எறும்புந்தன் கையால் எண் சாண்
28. உரைத்த – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி – III (மதிப்பெண்கள் – 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2x3=6**

29. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை எழுதுக.
30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பிள்ளைத்தமிழ் என்பது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்றாகும்.இதில் இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவர். பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்தியம்புவது பிள்ளைத் தமிழ். பத்துப் பருவங்கள் அமைத்து, பருவத்திற்குப் பத்துப்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பாடல்கள் என நூறு பாடல்களால் இது பாடப்பெறும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகையாகப் பாடப்பெறும்.

அ) சிற்றிலக்கியங்கள் எத்தனை வகைப்படும்?

ஆ) இறைவனையோ, தலைவனையோ குழந்தையாக கருதிப் பாடும் இலக்கியத்தின் பெயர் என்ன?

இ) பிள்ளைத்தமிழின் இருவகைகள் யாவை?

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:–** 2x3=6

**(வினா எண். 34–க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
33. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
34. அடிபிறழாமல் எழுதுக.

அ) 'அருளை பெருக்கி ............. எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடலை எழுதுக.

***(அல்லது)***

ஆ) 'நவமணி வடக் கயில் ............. எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடலை எழுதுக.

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்:–** 2x3=6

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.
36. நிரல் நிறை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
37. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர் – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

**பகுதி - IV (மதிப்பெண்கள் – 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5x5=25

38. அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்தியை விரித்து எழுதுக. ***(அல்லது)***

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) உணவு விடுதியில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உணவுப் பாதுகாப்பு, ஆணையருக்குக் கடிதம் எழுதுக. ***(அல்லது)***

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



41. **கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்க.**
தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம். (கபடி)

42. அ) ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டியதையும் அவர்கள் கட்டாயம் கையில் வைத்திருக்க வேண்டிய ஆவணங்களையும் எழுதுக.

*(அல்லது)*

ஆ) **தமிழில் மொழிபெயர்க்க:–**

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela.
2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going - Rita

**பகுதி - V (மதிப்பெண்கள் – 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3x8=24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

*(அல்லது)*

ஆ) நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.

**மகளிர் நாள் விழா**

**நாள்: 28.01.2025**

**இடம் : பள்ளிக் கலையரங்கம்**

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் – தலைமை ஆசிரியரின் வரவேற்பு – இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத் தலைவரின் நன்றியுரை.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

*(அல்லது)*

ஆ) ‘கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே’ என்கிறது வெற்றி வேற்கை
மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

*(அல்லது)*

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.
முன்னுரை – செய்திகள் அறிதல் – பயன்பாடு – செய்திகள் பெறும் வகைகள் – செய்தித்தாள்கள் – வார மாத இதழ்கள் – வானொலிப் பயன்பாடு குழு விவாதங்கள் – வாழ்வியல் மாற்றங்கள் – வாசிப்பை நேசிப்போம் – இல்லம் தோறும் நூலகம் – முடிவுரை.

***/***

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com